குள்ளர் குகை

கேட்டறியுங்கள் உங்கள்

புதிய

★ஜாதகபலன்!•

ஜோதிட போன்

இந்த வாரபலன்கள்

☎ 0011 222 222 0+□□

மேலே கொடுத்துள்ள பதினோரு எண்களையும் டயல் செய்வதுடன் உங்கள் சூரிய ராசிக்குக் கொடுத்துள்ள இரண்டு எண்களையும் டயல் செய்யவும்.

31 மேஷம்	**32** ரிஷபம்	**33** மிதுனம்
34 கடகம்	**35** சிம்மம்	**36** கன்னி
37 துலாம்	**38** விருச்சிகம்	**39** தனுசு
40 மகரம்	**41** கும்பம்	**42** மீனம்

மன ஜோதிடம்



உங்கள் வருங்கால ரகசியங்களை அறிந்திருங்கள்

☎ 0011 222 222 030

பொருத்தம்

உங்கள் துணையும் நீங்களும் ஒருவருக்கொருவர் பொருத்தமானவர்களா? என்று தெரிந்து கொள்ளுங்கள்

☎ 0011 222 222 047

பட்சி சாஸ்திரம்



ஒரு பண்டைய ஆரூட முறை. உங்கள் குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதில் சொல்கிறது.

☎ 0011 222 222 025

இது சர்வதேச போன் கால். அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்கள். எம் & ஏ, யு.எஸ்.ஏ.

ராணி காமிக்ஸ்–249
(மாதம் இருமுறை இதழ்)
TV
நவம்பர் 1–15
1994



குள்ளர் குகை

நாலுபுறமும் மலைகள் சூழ்ந்த, பச்சைப் பசேலென்று வளமாகத் திகழும் ராம் நகரில் ஜானி, பீட்டர் என்ற இரண்டு சிறுவர்கள் இருந்தார்கள். இருவரும் படிப்பில் கெட்டி. வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் அலைந்து கொண்டிருந்தார்கள்.


ஒரு நான் ஜானியும், பீட்டரும் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்கள்.
டேய் பீட்டர்! உன் அப்பா போலீசு அதிகாரி என்பதற்காகப் போக்குவரத்து விதியை மீறிச் செல்லாதே!
அது கிடக்கட்டும்! இருவரில் யார் முதலில் செல்கிறார்கள் எனறு பார்ப்போமா?
பீட்டர் பின்னே திரும்பி பேசிக் கொண்டே வண்டியை மிதித்ததில் கல் இடறி தலைகுப்புற விழுந்தான்.
ஆகா! என்னை முந்த யாராலும் முடியாது!
ஆ ஆ ஆ!
சே! சைக்கிளை ஓட்ட முடியாத அளவுக்கு ஆகி விட்டதே!
கடைசியில் பீட்டர் சைக்கிளை தள்ளிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது.


ஒரு நாள் ஜானி வெளியே செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.
என்ன ஜானி, எங்கே புறப்பட்டு விட்டாய்?
அப்பா! நானும் பீட்டரும் குகை ஆராய்ச்சியில் இறங்கி யிருக்கிறோம்! ஒரு குகையை தேடிச் செல்கி றோம்!
நல்லது! எச்சரிக்கையுடன் போய் வாருங்கள்!

குறிப்பிட்ட இடத்தில் ஜானியும் பீட்டரும் சந்தித்துக்கொண்டார்கள்.
அலோ பீட்டர்! தண்ணீர் கொண்டு வந்திருக்கிறாயா?
ஆமாம்! நான் தலைகவசம், டார்ச்லைட், கயிறு, உளி, சுத்தியல் எல்லாம் எடுத்து வந்திருக்கி றேன்!

இருவரும் மலை மீது ஏறி குகையைத் தேடினார்கள்.

ஓரிடத்தில் குகை இருப்பதைக் கண்டார்கள்.
ஜானி! இந்த பாறையில் கயிற்றை கட்டி குகைக்குள் இறங்குவோம்!
பிறகு பாறையில் கயிற்றைக் கட்டி இருவரும் குகைக்குள் இறங்கினார்கள்.
ஏய்...! கவனமாகப் போ!
அவர்கள் தொப்பியில் இருந்த விளக்கு வெளிச்சம் தந்தது. இருவரும் குகைக்குள் முன்னேறிச் சென்றார்கள்.
முன்னால் சென்ற பீட்டர் திடீரென்று கத்தினான்.
டமார்...!
ஆ... ஆ...!
பீட்டர் என்னாச்சு...? பேயடித்து விட்டதா?
பாறையில் மோதி விட்டேன், வேறு ஒன்றும் இல்லை!

குகையின் முடிவில் ஒரு பாதை தெரிந்தது
ஏய்... இங்கே ஒரு பாதை இருக்கிறது! ஆனால், சரிவாகச செல்கிறது!
இருவரும் யோசனையில் இருந்தபொழுது திடீரென்று கீச்கீச் சத்தம் காதைப் பிளந்தது.
உடனே இருவரும் டார்ச் விளக்கை அடித்துப் பார்த்தபொழுது வவ்வால் வெளியே பறந்து வந்தது.
பீட்டர்! என்ன இது?
என்ன ஜானி! வவ்வால் பார்த்தது இல்லையா?
வவ்வால் குகையில்தானே வாழும்!

நல்லவேளை! பேயோ என்று நான் பயந்து விட்டேன்! உண்மையிலேயே பயங்கரமான குகை போலத்தான் தெரிகிறது!
பேயாவது பிசாசாவது! அதெல்லாம் கட்டுக்கதை! வா உள்ளே போய்ப் பார்க்கலாம்!


இருவரும் கயிற்றை இடுப்பில் கட்டிக்கொண்டு இறங்கினார்கள்.
ஏய்...! பாதை சரிவாக இருக்கிறது!
கீழே விழுந்தால் எலும்பு நொறுங்கிவிடும்!

ஜானி, கயிறு வேகமாகச் செல்கிறதே! என்னாச்சு...!
பீட்டர் பதறினான்.
ஜானி கால் வழுக்கி இடுகிடு பள்ளத்துக்குள் விழுந்துகொண்டிருந்தான்.
ஆ... பீட்டர்...!
பீட்டர் கயிறைப் பிடித்து பத்திரமாகக் கீழே இறங்கினான்.
ஜானி, எதற்காகக் கயிறு கட்டி இருக்கிறாய்? அதை பிடித்துக்கொண்டு இறங்க வேண்டியதுதானே?
சறுக்கிவிட்ட பதட்டத்தில் கயிறை மறந்துவிட்டேன்.

பீட்டர்! எனக்கென்னவோ பயமாக இருக்கிறது!
பேசாமல் திரும்பி விடுவோமா...?
ஜானி வெடவெடத்துப் போயிருந்தான்.
இருவரும் சிறிது தூரம் நடந்து சென்றார்கள். திடீரென்று...
ஏய்... பிணவாடை வீசுகிறதே! உனக்குத் தெரிகிறதா?
ஆமாம்! ஏதோ செத்துக்கிடக்கிறது என்று நினைக்கிறேன்!
ஆ... குமட்டுகிறதே!


பீட்டர் டார்ச் விளக்கை அடித்துத் தேடியபொழுது...
அடப்பாவமே! ஜானி இங்கே பார்த்தாயா?
ஆமாம்! ஏதோ மிருகம் செத்து எலும்புக்கூடாகிக் கிடக்கிறது! பேய் அடித்திருக் குமோ!
சிங்கம், புலி இங்கே பதுங்கியிருக்கிறது என்று நினைக்கிறேன் அதுதான் இதனை அடித்துப் போட்டிருக்கும்!


இப்பொழுது ஒன்றையும் காணவில்லை!
ஏதோ மிருகம் இதனை அடித்து இங்கே வந்து போட்டிருக்கலாம!

ஜானி! இன்னும் கொஞ்சம் உள்ளே போனால் ஏதாவது நல்ல செய்தி கிடைக்கும்!

ஓர் இடத்தில் பாறையில் ஒளி கசிந்துகொண்டிருந்தது.
ஆ...! மேலே இருந்து சூரியஒளி வருகிறது!

பாறை இடுக்கு வழியாக ஒளி வருகிறது! சூரியஒளி இங்குள்ள பாறையில் பட்டு பிரதிபலிக்கிறது, பார்த்தாயா?
பீட்டர்! குகைக்குள் ஆறு ஓடுமோ?

இன்னும் சிறிது தூரம் போனால் ஆறு தென்படலாம்!

திடீரென்று குகைக்குள் இருந்து ஊளைச் சத்தம் கேட்டது.
ஊள ஊள ஊள ஊள ...ஊள ..
ஊள ஊள ஊள ...!
ஆ...! அய்யோ!


ஊளையைக் கேட்டு இருவரும் திடுக்கிட்டார்கள்.
ஜானி! இது என்ன சத்தம்!
மிருகம் அழுகிறது என்று நினைக்கிறேன்!

இங்குதான் எங்கோ பதுங்கியிருக்க வேண்டும்!
பேயாக இருக்காதே!


ஊளைச் சத்தம் தொடர்ந்து கேட்கிறதே!
உள உள...உள...உள...!
பேயாகத்தான் இருக்கும்! எனக்கு உடம்பே நடுங்குகிறது!!


திடீரென்று பாறைக்கு பின்னால் இருந்து நரி ஒன்று அவர்கள் மீது பாய்ந்தது.
ர்...! ர்...!
ஆ...! ஜானி அந்தப் பக்கம் விலகிக்கொள்...!
அதற்குள் சுதாரித்துக்கொண்ட பீட்டர் நரியை எட்டி உதைத்தான்.
ஊஊஊ...!
படார்...!
பீட்டர் உதைத்ததில் நரி தூரத்தில் போய் விழுந்தது.
உடனே பீட்டர் டார்ச் ஒளியை அதன் மீது அடித்தான்.
என்ன மிருகம்?
ஆ... நரி! இதுதான் இவ்வளவு நேரம் ஊளையிட்டிருக்கிறது!

விளக்கு ஒளிபட்டதும் நரி ஓடிவிட்டது.
நான் விட்ட குத்துக்கு பயந்து நரி ஓடிவிட்டது!
உன் குத்துக்கா? நீ பலே ஆள்தான்
நரியை அவர்கள் விரட்டியதும் பயம் தெளிந்தது.
எப்படியோ ஒரு வழியாக நரியை விரட்டி விட்டோம்!
துணிந்தவனுக்கு துக்கம் இல்லை என்பது சரியாகிவிட்டது!
இருவரும் சிறிது தூரம் நடந்திருப்பார்கள். இடையில் ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது.
ஆகா...! என்ன அருமையான இடம்!
ஏய்...! அங்கே பார் இன்னொரு குகை தெரிகிறது! ஆற்றுக்குள் இறங்கி அங்கே செல்வோமா?


ஆறு ஆழமாக இருந்தால் என்ன செய்வது?


அங்கே பார் ஜானி! ஆற்றில் வரிசையாக கற்கள் இருக்கிறது! அதுவழியாக போய்விடலாம்!
ஆமாம்! நல்லதாகப் போய்விட்டது!

இருவரும் கற்கள் வழியாக ஆற்றைக் கடந்தார்கள்.
குகையின் வாயிலுக்கு வந்தவர்கள் அப்படியே பிரமித்துப் போய் விட்டார்கள்.
ஆகா! அரண்மனை போலஇருக்கிறதே!
ஆச்சரியமாக இருக்கிறது!
வா உள்ளே போய் பார்க்கலாம்!
பீட்டர்! நேரம் ஆகிவிட்டது! இன்று இதுவரை போதும்! மீண்டும் நாளை வருவோம்!
ஓ.கே. ஜானி! நாளை வரும்பொழுது இரவு இங்கேயே தங்குவதற்கு வசதியாக வருவோம்!

உடனே இருவரும் கயிற்றை பிடித்துக்கொண்டு வந்த வழியே திரும்பினார்கள்.

குகையைவிட்டு வெளியே வந்தார்கள்.
அட! அதற்குள் இருட்டத் தொடங்கி விட்டதே!


ஜானி வீட்டில்--
மாமா! நாங்கள் பார்த்த குகையில் நிறைய சமாச்சாரங்கள் இருக்கின்றன.
அப்பா! நா கள் முழுமையாக பார்த்தபிறகு விபரம ாக சொல்கிறோம்!
குகை எங்கேயிருக்கிறது?

மறுநாள் இருவரும் மலையடிவாரத்துக்கு வந்தார்கள்.
பீட்டர்! நாம் இன்று இரவு குகையிலேயே தங்க அப்பாவிடம் அனுமதி வாங்கிவிட்டேன்!
நான் இரவுக்கும் சேர்த்து சாப்பாடு எடுத்து வந்துவிட்டேன்!

நேற்று பாதியில் விட்டுப்போன இடத்துக்கு இருவரும் வந்தார்கள்.
ஜானி! நேற்று இந்த வழியாகத்தான் ஆற்றைக் கடந்தோம் நினைவு இருக்கிறதா?
ஆமாம்...!


கற்களில் நடந்து வந்தபொழுது பீட்டரின் கால் வழுக்கியது.
ஏய்... பீட்டர்! பார்த்துப்போ... அவசரமில்லை!
அரண்மனை நுழைவாயில் போல இருந்த குகைக்கு வந்தார்கள்.
இந்த குகை வெளிச்சமாக இருக்கிறதே!
இது பேய்களின் அரண்மனையாக இருக்குமோ?
படிக்கற்கள் வழியாக இருவரும் கீழே இறங்கி வந்தார்கள். அந்த பெரிய அறையைப் பார்த்து அதிசயத்துப் போனார்கள்.
ஆகா...! அற்புதமான இடம்!
இதைப் பார்க்க அரண்மனை போலத்தான் இருக்கிறது.


இங்கே சுவரில் படங்கள் வரையப்பட்டு இருக்கிறதே? யார் வரைந்திருப் பார்கள்!
இருவரும் அரண்மனையைப் பார்த்து வாயைப் பிளந்தார்கள்.


இந்த படத்தைப் பார்த்தாயா? போரைப்பற்றி சித்தரிக்கிறது!
இருவரும் ஒவ்வொரு இடத்தையும், படத்தையும் கூர்மையாக கவனித்துக்கொண்டே வந்தார்கள்.

இது என்ன மிருகம்! பேயின் வாகனமாக இருக்கலாமோ!


ஜானி! யாரையும் காணவில்லையே?
இரவு இங்கேயே தங்கினால் ஏதாவது தடயம் கிடைக்கலாம்!


இருவரும் இரவு வரை அங்கேயே பொழுதை கழித்தார்கள். இரவு சாப்பிட்டுவிட்டு அங்கே படுத்தார்கள்.
சரி! இரவு தூங்கிவிட்டு காலையில் எழும்புவோம்!
ஓ.கே. பீட்டர்! நீயும் படுத்துக்கொள்!

அடேயப்பா! கொசு அதிகமாக இருக்கிறதே!
ஆமாம்! போர்வையை இழுத்து நன்றாக மூடித் தூங்கு!
இருவரும் அப்படியே தூங்கிப் போனார்கள்.
திடீரென்று நடுஇரவில் ஏதோ சத்தம் கேட்டு அவர்கள் கண் விழித்தார்கள்.
ஏய்...! ஏதோ சத்தம் கேட்கிறதே?
பேய் வந்து விட்டதா

டார்ச் லைட்டை எடு! என்னவென்று பார்த்துவிடுவோம்!


இருவரும் எழுந்து சிறிது தூரம்தான் நடந்திருப்பார்கள்.
ஆ...! என்ன இது?


அதற்குள் கால் தடுக்கி பள்ளத்துக்
குள் விழுந்தார்கள்.

தரையில் வந்து பொத்தென்று விழுந்தார்கள்.
டமார்...!
ஆ... அம்மா...!
ஜானி! உனக்கு ஒன்றும் அடிபடவில்லையே?
இல்லை! இப்பொழுது எங்கே வந்திருக்கிறோம்!
விளக்கு வெளிச்சத்தில் பார்க்கலாம்!
யாரோ நடந்து வருவது போல தெரிகிறது!


ஜானி டார்ச் விளக்கை சுற்றிலும் அடித்து நோட்டமிட்டான். அவர்கள் விழுந்த இடம் வண்டி போல இருந்தது.


ஏய்... பீட்டர்! நாம் இப்போது சிறையில் இருக்கிறோம்!
ஆமாம்! நாம் எப்படி சிறைக்கு வந்தோம்!
இருவரும் கம்பி வழியாக வெளியே மெள்ள எட்டிப் பார்த்தார்கள்.


பேய் மாய சக்தியால் நம்மை சிறை வைத்துவிட்டதா?
ஏய்... இது பெரிய அறை போலத் தெரிகிறது. நம்மை பொறி வைத்து பிடித்தது போல இருக்கிறது!

திடீரென்று வண்டி நகர்ந்ததும் இருவரும் திணறிப் போனார்கள்.

வெளியில் பார்த்தவர்கள் பிரமித்துப் போனார்கள்.
அடக்கடவுளே! எலிகள் அல்லவா நம்மை இழுத்துச் செல்கின்றன!
அடேயப்பா! எவ்வளவு பெரிய எலிகள்!
எலிகள் நம்மை எங்கே இழுத்துப் போகிறது என்று தெரிய வில்லையே?
அதுதான் எனக்கும் புரிய வில்லை!
இப்பொழுது என்ன செய்வது?
இது சர்க்கசில் மிருகத்தை அடைத்து வைக்கும் வண்டி மாதிரி இருக்கிறது!

வண்டி இருட்டைவிட்டு வெளிச்சத்துக்கு வந்தது.
எலிகள் எதற்காக நம்மை இழுத்துப் போகிறதோ...?
பீட்டர்! சுவரில் இருந்த படங்களில் இந்த எலிகள் இருந்தது நினைவு இருக்கிறதா?
ஆமாம்! அப்படியானால் இவைகளை பேய்கள்தான் ஏவிவிட்டு இருக்க வேண்டும்!


பார்த்தாயா? மேல் கூரையில் இருக்கும் பாறை வழியாக ஒளி வருகிறது!
வண்டி தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்தது.

வண்டி எப்பொழுது நிற்கும் என்று தெரியவில்லையே?
நாம் தப்பிக்க ஏதாவது வழி இருக்கிறதா?


கடைசியில் ஓர் இடத்தில் வந்து வண்டி நின்றது.
ஏய்...! இது மன்னரின் அரச சபை போல இருக்கிறதே!
இங்கே எலிகளைத் தவிர வேறு ஒன்றும் இல்லையே?

சிறிது நேரத்தில் எங்கோ தூரத்தில் இருந்து சத்தம் வந்தது.
ஆ...ஊ...! ஆ... ஊ...! ஆ...ஊ...! ஆ...ஊ...! ஆ... ஊ...! ஆ...ஊ!
ஏய்...! பேய்கள் வருகிறது என்று நினைக்கிறேன்!
இருவரும் பயத்தில் உறைந்து போனார்கள்.

திடீரென்று பாறைகளுக்கு இடையில் இருந்து குள்ளர்கள் வெளிப்பட்டார்கள். கையில் ஆளுக்கு ஒரு எலியை பிடித்திருந்தார்கள்.
ஆ....ஊ....!
ஆ....ஊ....!
குள்ளர்கள் அனைவரும் கறுப்பு முகமூடி அணிந்திருந்தார்கள்.
ஆ....ஊ....!
ஆ....ஊ....!
குள்ளர்கள் அங்கே இருந்த இருக்கைக்கு வந்து அமைதியுடன் நின்றுகொண்டிருந்தார்கள்.
இவர்கள்தான் குகை மனிதர்களா? இவர்கள் நம்மை என்ன செய்யப் போகிறார்கள்?

அப்போது— அங்கே குளளர்களின் தலைவன் வந்தான்.
உடனே கூடியிருந்த குள்ளர்கள் வாழ்த்துக் கோசமிட்டார்கள்.
வாழ்க மன்னர்! வாழ்க மன்னர்!
மன்னன் சிம்மாசனத்தில் அமர்ந்ததும் மற்றவர்களும் அமர்ந்தார்கள். உடனே அமைச்சர் பொறுப்பில் இருந்த குள்ளன் எழுந்து மன்னனிடத்தில் பேசினான்.
மன்னா! வேற்று நாட்டைச் சேர்ந்தவர்கள் இருவர் நம் இடத்துக்குள் நுழைந்திருக்கிறார்கள்!

உடனே மன்னன் ஜானியிடமும், பீட்டரிடமும் விசாரித்தான்.
யார் நீங்கள்? எதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள்?


நாங்கள் மனிதர்கள்! விளையாட்டாக குகைக்குள் வந்தோம். வெளியில் செல்ல வழி தெரியவில்லை...!
இல்லை! பொய் சொல்கிறார்கள்.

மனிதர்கள் எப்பொழுதும் நமக்கு தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை சும்மா விடக்கூடாது!

இவர்களை கொல்ல வேண்டும்!
உயிரோடு விட்டால் நமக்கு ஆபத்து!
ஆமாம்...! ஆமாம்...!
இது முட்டாள்தனம்!
தயவுசெய்து எங்களை விடுவியுங்கள்!
நீங்கள் மனித உளவாளிகள்! எங்களைப் பற்றி அறிய வந்திருக்கிறீர்கள்!

நாங்கள் உளவாளிகள் இல்லை! உங்களுடன் சண்டைக்கு வரவில்லை! எங்களை நம்புங்கள்!

இல்லை! பொய்...!
இவர்களை உயிரோடு விடக்கூடாது!


சரி! அப்படியானால் இன்று இரவு இவர்களை உணவாக்கிக் கொள்வோம்!
ஆகா...! அருமையான முடிவு!

நம்மை இரவு உணவுக்காக கொல்லப் போகிறார்களாம்!
ஏய்...! அவர்கள் நம்மை சும்மா மிரட்டிப் பார்க்கிறார்கள்! பயப்படாதே!
இரவில் குள்ளர்கள் திரும்பி வந்தார்கள்.
நாம் தப்பிக்க இதுதான் நேரம். அவர்கள் கதவை திறந்ததும் நாம் தப்பி ஓடிவிட வேண்டும்!
அவர்களை வெளியே இழுத்து வாருங்கள்!
குள்ளர்கள் வண்டியின் கதவை திறந்தவுடன் இருவரும் தப்பி ஓடினார்கள்.
வேகமாக ஓடு...!

ஆனால்... குள்ளர்கள் ஜானியை மடக்கிப் பிடித்தார்கள்.
ஜானி! தப்பி வந்துவிடு!
அய்யோ... ஈட்டியை வைத்து குத்திவிடுவார்கள் போலிருக்கிறது!
குள்ளர்கள் அவர்கள் இருவரையும் பிடித்து ஒரு தூணில் கட்டிப் போட்டார்கள்.
அடக்கடவுளே! என் வாழ்க்கை இத்தோடு முடிந்துவிட்டதா?
ஜானி பயத்தில் உளறினான்.
இருவரையும் சமைக்க பாத்திரம் தயாரானது
சீக்கிரம் நெருப்பை வையுங்கள் சுவை நன்றாக இருக்க வேண்டும்!

அப்போது– வேறு ஒரு சத்தம் வெளியே இருந்து வந்தது.
ஊ...ஈ...!
ஊ...ஈ...!
ஊ...ஈ...!
குள்ளர்கள் அந்த சத்தத்தைக் கேட்டு விரைத்துப் போனார்கள்.
இது என்ன சத்தம்? எங்கிருந்து வருகிறது?
ஜானியும், பீட்டரும் புரியாமல் விழித்தார்கள்.
என்ன ஆச்சரியம். இவர்களைப் போலவே இன்னொரு குள்ளர் பட்டாளம் கையில் தடியுடன் விரைந்து வந்தது. எலிகள் சிதறி ஓடியது.
அவர்கள் அனைவரையும் அடித்துக் கொல்லுங்கள். யாரையும் உயிரோடு விடக்கூடாது!
வந்த குள்ளர்கள் முகமூடி எதுவும் இல்லாமல் சாதாரணமாக இருந்தார்கள்.

பீட்டர்! இந்தக் குள்ளர்கள் வித்தியாசமாக இருக்கிறார்களே?
இவர்கள் அவர்களுக்கு எதிரி போலத் தெரிகிறது!
இரண்டு குள்ளர் படைகளுக்கும் மோதல் உருவானது.
ஒருவரையும் உயிரோடு விடாதீர்கள்...!
ஏய்...!
ஆ...! அம்மா...!
படார்...!

முகமூடி அணிந்த குள்ளர்கள் தலைதெறிக்க ஓட்டம் பிடித்தார்கள்.
பயந்து ஓடுகிறார்கள் பாருங்கள்!
ஏய்... எங்கே போனாலும் உங்களை விடமாட்டோம்! ஹா...ஹா...
அதற்குள் முகமூடி குள்ளர்களின் தலைவனை மடக்கிப் பிடித்தார்கள்.
ஏய்... எங்களை என்ன நினைத்தாய்...?
பீட்டர்! குள்ளர்களுக்குள் இரண்டு கோஷ்டி! ஒருவருக்கொருவர் எதற்காக அடித்துக்கொள்ளு கிறார்கள்?

வந்தவர்களுடைய குள்ளர்களின் தலைவன் இவர்கள் முன் வந்தான்.
பயப்படாதீர்கள்! நீங்கள் எங்களுடன் வந்துவிடுங்கள்!
அதன்பிறகு உங்களை எவன் தொடுகிறான் என்று பார்த்துவிடுகிறேன்!
தலைவன் ஆவேசமாக குரல் கொடுத்தான்.
குள்ளர்கள் இவர்கள் இருவரையும் விடுதலை செய்து தங்களுடன் அழைத்து வந்தார்கள். நீண்ட நேர பயணத்துக்குப் பிறகு ஒரு அரண்மனையை அடைந்தார்கள்.
எங்களுக்கு இது ஒரு புதுமையான வித்தியாசமான அனுபவம்!

ஒரு அழகிய அறைக்கு இருவரையும் அழைத்து வந்தான், தலைவன்.
எங்களை அவர்களிடம் இருந்து காப்பாற்றியதற்கு மிக்க நன்றி!
உங்களை அவர்கள் கைது செய்திருப்பதாக கேள்விப்பட்டேன். உடனே புறப்பட்டு வந்து மீட்டு விட்டேன்!
நீங்கள் ஏன் பூமிக்கு அடியில் வாழ்கி றீர்கள்...!
அதுவா! நீங்கள் வரும்பொழுது சுவரில் உள்ள படங்களை பார்த்திருப் பீர்களே! அதுதான் எங்கள் வாழ்க்கை!
அதைக் கொஞ்சம் விபரமாக கூறுங்களேன்!
சொல்லுகிறேன்!

ஒரு காலத்தில் நாங்கள் மகிழ்ச்சியாகத்தான் வாழ்ந்து கொண்டிருந்தோம்!
நாங்கள் எலிகளை வாகனமாக வைத்து எல்லா தேவைகளையும் நிறைவேற்றி வந்தோம்!
ஒருநாள் மனிதர்கள் எங்களை தாக்கத் தொடங்கி, அடிமைகளாக நடத்தத் தொடங்கினார்கள்.
வாருங்கள் அடிமைகளே!

அதன்பிறகு நாங்கள் மனிதர்களைச் சாலையில் கண்டாலே பயந்து நடுங்கி குழிகளில் பதுங்கி வாழ்ந்து வந்தோம்!
அதன்பிறகு வேறு ஒரு சோதனை எங்களுக்கு வந்தது.
ஒரு சிறிய பறவை எங்களுக்கு நோய்களை பரப்பி நிறைய பேரை இழக்கச் செய்து விட்டது!
அதனால்தான் நாங்கள் பூமிக்கு அடியில் வாழ்க்கையை தொடங்கினோம்!
எங்களுக்குள் ஒற்றுமையில்லாமல் இரண்டு பிரிவுகளாக பிரிந்துவிட்டோம்!

பூமிக்கு அடியில் இருட்டு ஒரு பிரச்சினை. அதனை சமாளிக்கத்தான் ஒளியை பிரதிபலிக்கக் கூடிய கற்களை பயன் படுத்தி வெளிச்சத்தை ஏற்படுத்துகிறோம்!
பெரிய பிரச்சினை அந்தச் சிறிய பறவைதான்!
இந்த பறவை மட்டும் இல்லாவிட்டால் எங்கள் வாழ்க்கை சொர்க்கம்தான்!
அந்த பறவையை எங்களுக்கு காட்ட முடியுமா?
அதோ பறக்கிறது பாருங்கள் அந்தப் பறவைதான்!
அட இதுதானா?


அந்தப் பறவையைப் பார்த்து ஜானியும் பீட்டரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.
ஹா...ஹா...ஹா...'
இந்தப் பறவையா?
இது கொசுவல்லவா?

இது ஏகப்பட்ட நோயை பரப்பக் கூடியது!
இதனை விரட்ட நிறைய வழிகள் இருக்கிறதே?
அப்படியா?

கொசுத் தொல்லையில் இருந்து இவர்களுக்கு விடுதலை வாங்கித் தரவேண்டும்!
எங்களுக்கு எப்படி விடுதலை கிடைக்கும்?
சொல்லுகிறோம்! முதலில் எங்களை பிடித்தானே அந்தத் தலைவரிடம் அழைத்துச் செல்லுங்கள்!
வாருங்கள் கண்டிப்பாக அழைத்துச் செல்லுகிறேன்!

முகமூடிக் கூட்ட குள்ளர்கள் சிறையில் அடைக்கப்பட்டு இருந்தார்கள்.



ஆமாம்! நீங்கள் இருவரும் ஒன்றுபட்டு ஒரே இனமாக மகிழ்ச்சியுடன் வாழவேண்டும்!
அது என் ஆசை!
உடனே முகமூடிக் குள்ளர்கள் கூட்டம் போட்டு விவாதித்தார்கள்.
ஆமாம்! நாம் ஒன்று பட்டால் என்ன?
எதற்காக சண்டை போடவேண்டும்?
இரண்டு இனத்தையும் ஒன்றாக இணைக்க இருவரும் முயன்றார்கள்.
நாங்கள் எப்பொழுதும் தயார்!

நாங்களும் தயார்!
ஓ.கே.! நான் இப்பொழுதே சென்று கொசுக்களை அழிக்க மருந்துகள் எடுத்து வருகிறேன்!

நிச்சயமாக எங்களை அந்த பறவைகளிடம் இருந்து காப்பாற்றுவீர்கள் அல்லவா?
நிச்சயமாக.

சரி! முதலில் சிறையில் இருப்பவர்கள் அனைவரையும் விடுதலை செய்யுங்கள்!


சிறையில் இருப்பவர்கள் விடுவிக்கப்பட்டதும் குள்ளர்கள் ஒருவரை ஒருவர் தழுவி நட்புரிமை வளர்த்துக்கொண்டார்கள்.
நாங்கள் இனி பிரியமாட்டோம். இருவரும் கூட்டு குடும்பம் போல செயல்படுவோம்!
31


உடனே இருவரும் குகையைவிட்டு வெளியே வந்தார்கள்.
பெரியவர்களிடம் கேட்டால் கொசுவை அழிக்க மருந்து தருவார்களே!


ஜானியும், பீட்டரும் வீட்டுக்கு வந்து பெற்றோர்களிடம் விசயத்தை சொன்னார்கள்.
இரண்டு நாளாக எங்கே போயிருந்தீர்கள்?
அதை பிறகு சொல்கிறேன்! முதலில் மலேரியாவை தடுக்க நிறைய மருந்துகள் வேண்டும் அப்பா...!

நடந்த கதையைக் கேட்டு பெற்றோர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.



உடனே இருவரும் மருந்தை பெற்றுக்கொண்டு குகைக்கு வந்தார்கள்.



உடனே குள்ளர்கள் அவர்கள் இருவரையும் வழி அனுப்பி வைத்தார்கள்.
நோய்களில் இருந்து எங்கள் இனத்தை காப்பாற்றிய உங்கள் படங்களை சுவரில் வரையப் போகிறோம். முடிந்ததும் வந்து பாருங்கள்!


உடனே குள்ளர்கள் ஜானியின் படத்தையும், பீட்டரின் படத்தையும் சுவரில் அழகாக சித்திரமாக வடித்தார்கள்.
(முடிந்தது)

நீல மலை இளவரசி

அருண்

15

முன்கதை சுருக்கம்:--

நீலமலை என்ற நாட்டை குமணன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் மகள் எழினி அழகும், வீரமும் நிறைந்தவள். அவள் புலி வேட்டைக்குக் காட்டுக்குப் போனாள். அங்கு அவளைப் பார்த்த ஒரு மந்திரவாதி, அவளை மணந்துகொள்ள விரும்பினான். அவள் மறுக்கவே, அவளைக் கிழவி ஆக்கிவிட்டான். அவளைத் தேடி இளவரசன் சிங்கமுகன் போனான். கிழவி வடிவில் இருந்த இளவரசியை சந்தித்தான். மந்திரவாதியுடன் பேச்சுக் கொடுத்து, அவனது இரகசியத்தை அறிந்துகொள்ளும்படி இளவரசிக்கு யோசனை சொன்னான்.

மந்திரவாதி தனது அருமை பெருமைகளை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், இளவரசி எழினி அவனை நம்பாதவள் போலவே நடித்தாள்.

“நான் அழிவற்றவன் என்பதை உனக்குக் காட்டுகிறேன், பார்.'' என்றான், மந்திரவாதி.

கைகளை நீட்டி, “ஜெய்... காளி...'' என்று மந்திரம் சொன்னான்.

அவன் கையில் ஒரு வாள் வந்தது.

“இந்த வாளால் என் தலையை வெட்டு'' வாளை இளவரசியிடம்

நீட்டினாள்.

"எதுக்கு?" இளவரசி கேட்டாள்.

"வெட்டேன், சொல்லுகிறேன்."

"வெட்டிய பிறகு எப்படி நீ சொல்ல முடியும்."

"முதலில் வெட்டு."

தலையைக் குனிந்து கொடுத்தான்.

இளவரசி வாளால் அவனது கழுத்தில் வெட்டினாள்.

தலை தனியே போய் விழுந்தது!

வேர் அறுந்த மரம் போல உடல் விழுந்தது!

இளவரசி வியப்புடன் பார்த்தாள்!

தலை "அ—அ—ஆ..." என்று சிரித்தது!

இளவரசி திடுக்கிட்டாள்.

'சர்...' என்று பறந்து போன தலை, உடலுடன் மீண்டும் ஒட்டிக் கொண்டது!

மந்திரவாதி எழுந்து நின்றான்!

"பார்த்தாயா? என் தலையை வெட்டினால்கூட எனக்கு சாவு கிடையாது!" மந்திரவாதி பெருமையாகச் சொன்னான்.

இளவரசி சிரித்தாள். "என்னை இதை நம்பச் சொல்லுகிறாயா?" என்று கேட்டாள்.

"மந்திர தந்திரம் கற்ற யாருமே இந்தக் கண்கட்டு வித்தையைச் செய்வார்களே!" என்றும் அவள் கூறினாள்.

மந்திரவாதி மேற்கொண்டு பேச முடியாமல் நெளிந்தான். ஏதோ சொல்ல நினைத்தான். சொல்ல முடியாமல் தவித்தான்.

அவனைப் பேச வைக்க இளவரசி முயற்சித்தாள். "ஒரு சாதாரண மனிதனை நான் எப்படி மணந்துகொள்ள முடியும்?" என்று கூறினாள்.

"நான் சாதாரண மனிதன் அல்ல, இளவரசி. சாகா வரம் பெற்ற மாமனிதன்" என்று மந்திரவாதி சொன்னான்.

"இதையேதான் சொல்லிக் கொண்டிருக்கிறாய். இதை எப்படி நான் நம்புவது?" இளவரசி அலட்சியமாகக் கூறினாள்.

"என் உயிர் இருக்கும் இடம்கூட யாருக்கும் தெரியாது" என்றான், மந்திரவாதி.

"எல்லாருக்கும் இந்த உடல்தானே உயிர் இருக்கும் கூடு."

"எனக்கு அப்படி அல்ல. என் உயிர் ஒரு பாம்பிடம் இருக்கிறது?"

"என்னது! உன் உயிர் ஒரு பாம்பிடம் இருக்கிறதா! நீ என்ன பி... மனிதனா!'' இளவரசி சிரித்தாள்.

"நான் கூடுவிட்டு கூடு பாயும் வித்தை கற்றவன். என் உயிரை ஒரு பாம்பின் உடம்பில் செலுத்தியிருக்கிறேன்.''

''பாம்பைத்தான் யார் வேண்டுமானாலும் அடித்துக் கொல்லுவார்களே! அப்பொழுது 'பொட்' என்று உன் உயிர் போய்விடுமே!''

"பயங்கரமான கருநாகம், அது. பார்த்தாலே யாரும் பயப்படுவார்கள். அதன் பக்கத்தில் போக முடியாது. அதன் மூச்சுக் காற்று பட்டாலே மனிதனுக்கு மரணந்தான்.''

"மிகவும் பாதுகாப்பாகத்தான் உயிரை வைத்திருக்கிறாய்! ஆனால், பாவம். பாம்புப் பிடாரனிடம் அகப்பட்டுக்கொள்ளக்கூடாது.''

"நிச்சயம் அகப்படாது. நாகலோகத்தில் அல்லவா வைத்திருக்கிறேன். அங்கே மனிதர்கள் நுழைய முடியாது.''

"என்னவோ கதை சொல்லுகிறாய். நானும் நம்புகிறேன்'' இளவரசி அலட்சியமாகச் சொன்னாள்.

"இளவரசி.''

"என்ன?''

"என் உயிரின் இரகசியம் உனக்குத் தெரிந்துவிட்டது. ஆகவே, என்னை நீ கட்டாயம் திருமணம் செய்துகொண்டே ஆகவேண்டும்!''

"ஏன்? நான் கேட்டேனா? நீயாகச் சொன்னாய்!''

"என் மீது நம்பிக்கை ஏற்பட்டு, என்னை மணந்துகொள்ளுவாய் என்று நம்பித்தான் சொன்னேன்.''

"நான் உன்னை மணந்துகொள்வதாக வாக்குக் கொடுக்கவில்லையே!''

"எப்படியோ என் உயிரின் இரகசியம் உனக்குத் தெரிந்துவிட்டது. இனி, நீ என்னைத் திருமணம் செய்துகொண்டுதான் ஆகவேண்டும். திருமணம் செய்துகொண்டால்தான் இந்த இரகசியத்தை வேறு யாரிடமும் சொல்லமாட்டாய். சொன்னால், நம் கணவரின் உயிருக்கு ஆபத்து வந்துவிடுமே என்று பயப்படுவாய்.''

"ஊகூம்! உன்னை நான் மணந்துகொள்ள மாட்டேன்.''

"மணந்துகொள்ளாவிட்டால், நீ சாக வேண்டும்.''

"நான் சாக வேண்டுமா?''

"ஆம்! நீ செத்தால் இரகசியம் வேறு யார் காதுக்கும் போகாது அல்லவா? மணமா? மரணமா? நீயே முடிவு செய்துகொள்!'

"அய்யோ! என்னை இருதலைக்கொள்ளி எறும்பு போல ஆக்கிவிட்டாயே!'' இளவரசி வருந்தினாள்.

"என் இரகசியத்தைத் தெரிந்துகொண்ட நீ என்னை மணந்துகொள்ள வேண்டும். அல்லது சாக வேண்டும். இரண்டில் எது என்பதை நீயே முடிவு செய்துகொள். பத்து நாள் கழித்து வருகிறேன்.''

இக்கட்டில் மாட்டிக்கொண்டோமே என்பது போல இளவரசி கைகளைப் பிசைந்தாள். "நான் என்ன செய்வேன்'' என்று புலம்பினாள். அவள் முகத்தில் கவலை படர்ந்தது.

"பத்து நாள் கழித்து மீண்டும் வருகிறேன். அதற்குள் முடிவு செய்து வை'' சொல்லிவிட்டு, மந்திரவாதி சென்றான்.

வாடிய முகத்துடன் அவன் போவதையே பார்த்துக்கொண்டு இளவரசி நின்றாள். அவன் போனதும் அவள் முகம் மலர்ந்தது. ஆவலுடன் இளவரசனை எதிர்பார்த்தாள்.

இளவரசன் சிங்கமுகன் மரத்து உச்சியில் பதுங்கி நின்று, இவர்கள் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தான். மந்திரவாதி போவதை அவனும் பார்த்துக் கொண்டிருந்தான். மந்திரவாதி குகைக்குள் சென்றதும், மரத்திலிருந்து வேகமாகக் கீழே இறங்கினான். இளவரசியை நோக்கி விரைந்து சென்றான்.

இளவரசனைப் பார்த்ததும் இளவரசி புன்னகைத்தாள்.

"வாருங்கள், மறைவாகப் புதருக்குள் போய்விடலாம்'' என்று அழைத்தாள்.

"மந்திரவாதி பார்ப்பது என்றால், நாம் எங்கே இருந்தாலும் பார்த்துவிடுவான்'' என்றான், இளவரசன். "அவன் என்ன சொன்னான்? அதைச் சொல்'' என்று அவசரப்படுத்தினான்.

அவனது உயிரின் இரகசியத்தை இளவரசி சொன்னாள். "அந்தப் பாம்பு நாகலோகத்தில் இருக்கிறதாமே! உங்களால் அங்கே போக முடியுமா?'' என்று கேட்டாள்.

"எந்த உலகத்துக்கும் என்னால் போக முடியும். ஏதாவது ஒரு பாதை திறந்திருக்கும்'' என்று இளவரசன் சொன்னான்.

"பத்து நாளைக்குள் நீங்கள் திரும்பி வந்துவிட வேண்டும். இல்லாவிட்டால், என் பிணத்தைத்தான் பார்ப்பீர்கள்.''

"அவசர முடிவுக்கு வந்துவிடாதே, இளவரசி. எப்படியும் பத்து நாளைக்குள் நான் திரும்பி வந்துவிடுவேன். அப்படி வராவிட்டால், அவனை மணக்க சம்மதிப்பது போல நடி. மணந்துகொள்ள நல்ல நாள் பார்ப்பது போல மேலும் சில நாள் தவணை கேள். நான்

எப்படியும் வந்துவிடுவேன். சாவதற்கு மட்டும் முயற்சி செய்யாதே.''

"மணமகளாக அவனுக்கு மாலையிடவும் என்னால் முடியாது. அதைவிட சாவதே மேல்.''

"அந்த நிலை ஏற்படாது. அதற்குள் நான் வெற்றியுடன் திரும்பி வருவேன். உன்னை அழைத்துச் செல்லுவேன்'' என்று இளவரசன் உறுதியாகக் கூறினான்.

"பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. இப்பொழுதே நான் புறப்படுகிறேன். நீ பாதுகாப்பாக இரு'' என்று சொல்லிவிட்டு, இளவரசன் கிளம்பினான்.

அவனைப் பிரிவது இளவரசிக்குப் பெருந்துயரமாக இருந்தது. அவள் கண்கள் கலங்கின.

"கலங்காதே! பத்து நாளில் நிச்சயம் நான் திரும்பிவிடுவேன்'' என்று இளவரசன் ஆறுதல் கூறினான்.

தனது இடத்துக்கு வேகமாக வந்தான். அவனோடு இளவரசியும் வந்தாள்.

கட்டிப் போட்டிருந்த குதிரையை அவிழ்த்தான். அதன் மீது ஏறிக்கொண்டான். "வருகிறேன்'' என்று கூறிவிட்டு குதிரையைத் தட்டிவிட்டான்.

செடி கொடிகள் நிறைந்த அந்தக் காட்டில் குதிரை மெதுவாகவே சென்றது. அவன் போவதையே பார்த்துக்கொண்டு இளவரசி நின்றாள்.

அவனும் திரும்பித் திரும்பிப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டும், கைஅசைத்துக் கொண்டும் சென்றான்.

மரங்கள் இடையே அவன் உருவம் மறைந்தபொழுது, இளவரசி கண்ணீர் வடித்தாள்.

"சே! கோழை போல அழுகிறேனே!'' அவளே கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"அவர் மாவீரன்! நிச்சயம் வெற்றியுடன் திரும்புவார்!'' சொல்லிக் கொண்டே, சிரித்துக் கொண்டாள்.

அந்த சிரிப்புடன் தனது இருப்பிடத்தை நோக்கி நடந்தாள்!

(தொடரும்)

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ் சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ. மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

சமாதானப் புறா!

அலகாபாத் பிறந்தவரே நேருமாமா!
அழகாகக் கேம்பிரிட்சில் அறிஞரானார்!
உலகுபுகழ் காந்தியினைக் கண்டபின்னர்
உடலுயிரும் இந்தியத்துக்கு என்றே சொன்னார்!
நலமேதும் கருதாமல் பாடுபட்டே
நாளெல்லாம் சுதந்திரத்திற் காக உழைத்தார்
பலமோடு வெள்ளையரை எதிர்த்து நின்றே
பாரதத்தின் விடுதலையை வாங்கித்தந்தார்!

பலகாலம் சிறையினிலே கிடந்தார் பின்னர்
பாரதத்தின் பிரதமராய்ப் பதவியேற்றார்!
உலவுகின்ற சமாதானக் கொள்கைதன்னை
ஊக்கமுடன் பாரதத்தில் பரவச்செய்தார்!
நிலவுகின்ற புகழுடைய பஞ்சசில
நெறிதந்தார் புகழ்பெற்றார் நீடுவாழ்ந்தார்!
இலவாகி அறுபத்து நான்கில்போனார்
இருந்தாலும் நம்மனதில் என்றும் உள்ளார்!

--தேவகோட்டை அக், அபுதாபி.

அடுத்த காமிக்ஸ்

முகமூடிவீரர்

மாயாவி

தோன்றும்

பேய்க் கோட்டை

திகிலூட்டும் மர்மக் கதை!

படிக்கத் தவறாதீர்கள்!

நவம்பர் 16-ந்தேதி வெளிவருகிறது!

“ராணிகாமிக்ஸ்”, சென்னை-600 007.

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளிதோறும்

சிறுவர் தங்கமலர்

* அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
* புராண படக்கதை
* துப்பறியும் படக்கதை
* குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
* மாயாஜால சிறுவர் தொடர்கதை
* சிறுகதைகள்
* பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளிதோறும் இலவச இணைப்பாக 32 பக்க வண்ண புத்தகம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்

RANI COMICS
TAMIL FORTNIGHTLY

Regd. No. TN/MS (N)/461
Registered as Newspaper in Sri Lanka

everest/94/PP/72-tm-R